தொல்காப்பியச் சொற் சுவைகள்

தமிழண்ணல்

J·

Ic

தொல்காப்பியச் சொற்சுவைகள்

தமிழண்ணல்

தமிழ்ப் பயிற்சிக் களம்
புதிய தமிழியக்கம்
'ஏரகம்', 4/585 (732) சதாசிவநகர்,
முதன்மைச் சாலை, மதுரை—625020.
பேசி : 0452-2533792 செல்—பேசி : 94430—64749

தொல்காப்பிய அரங்கேற்றம்

அவையம் / சங்கம்

தொல்பழங்காலத்தில் மன்னர்களின் அரண்மனைகளில் புலவர், பாணர், பொருநர், கலை வல்லுநர் வந்து, மன்னரைக் காணும் தனி மண்டபங்கள் இருந்தன. சிறபபு நாட்களில் மக்களும் அங்குக் கூடுவர். மன்னர்தம் புகழ் பாடுவதோடு, பலவிதமான கலைநுகர் அவைகளாகவும் அவை திகழ்ந்தன.

ஆயினும் பாண்டியர்களுக்குத் தென்திசையில் ஏற்பட்ட கடல்கோள்களால், மக்களுடன் புலவர், கலைஞர்களையும், காக்கவேண்டியிருந்தது. கலை, இலக்கியம், நாகரிகம், பண்பாட்டையும் நிலையாகக் காக்கவேண்டிய உந்துதல் ஏற்பட்டது. அதனால் அவர்கள் நிலைபேறுள்ள 'அவையம்' அமைத்தனர். என்றும் நிலையாகத் தங்கி அறிவாராய்ந்து புலந்தழைக்குமிடமாக இவ் 'அவையம்' விளங்கியது.

முதற்கடல்கோளுக்குத் தப்பி வந்த மக்களையும் தமிழையும் 'நிலந்தருதிருவிற் பாண்டியன்' காப்பாற்றி, தன் அவையத்தில், அன்றைய தலைமைப் புலவர் தொல்காப்பியரைக் கொண்டு, கடலில் கரைந்துபோன அப் 'பழைமை'யை, ஒரு நூலுருவில் இயற்றுவித்தான். பெரும்பான்மையான சங்கப் பாடல் தொகுப்புக்கள் இவ் அவையத்தேதான் இரண்டாம் கடல் கோளுக்குப் பிறகு நடந்தேறின. அவையம் ஒன்றேயாயினும் இரண்டு பெரிய கோள்களால் இடையறவு பட்டதால், மூன்று என மக்கள் குறிப்பிடவேண்டியதானது.

கிரேக்கர்களின் 'அக்காதெமி' (Academy) போன்றது இது.

தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன் போல (மதுரை.761–63)

என்பது, மாங்குடி மருதனார், பாண்டியன் நெடுஞ்செழியனை வாழ்த்தியது. அவனது முன்னோனான, இப் பாண்டியன் பற்றி, தொல்காப்பியப் பாயிரத்தில்,

நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து

தொல்காப்பியம் அரங்கேற்றப் பட்டதாக வருகிறது. இப்பழைய பாண்டியன் இயற்பெயர் தெரிந்திலது. இவன் புலவரை அழைத்து, ஒன்று கூட்டியதையே, 'புணர் கூட்டு உண்ட' என்று கூறப்படுகின்றது. மக்களையும் கூட்டி, தானும் இருந்து, இலக்கிய இன்பம் நுகர்ந்தானாம். (தொல் ஆணை – தமக்கு முற்பட்ட நூல்களில் வல்ல. புணர் கூட்டு – அந்த அறிஞர்களை ஒன்று கூட்டி. ஓரிடத்தில் ஒருங்கு கூட்டி, உண்ட – அவர்கள் கூறியனவும் பாடியனவுமான இலக்கிய இன்பத்தை நுகர்ந்த.)

ஏனைய சேர, சோழர்க்கு, 'அவையம்' (சங்கம்) அமைக்கும் எண்ணம் எழாதது ஏன்? அவர்களைப் பாடிய பாடல்கள் நிரம்ப இத் தொகுப்புக்களில் உள்ளனவே?

ஐங்குறுநூறும், பதிற்றுப் பத்தும் சற்றே வேறுபடப் பாடப் பட்டவை. பிற தொகைகளில் பாடிய அதே புலவர்களே, இதில் பத்துப் பத்தாகப் பாடியுள்ளனர். அவற்றைத் தொகுத்தார், தொகுப்பித்தார் பற்றிப் பார்க்கும் பொழுது, அவை இரண்டும் சேரமன்னர் தொடர்புடையன என வெளிப்படையாகத் தெரிதலாலும் அங்கும் ஓர் 'அவையம்' இருந்ததோ என எண்ண இடமேற்படுகிறது. ஆயினும் அது பாண்டியர் அமைத்த அவையத்தினளவு புகழ் பெற்றிலது.

தமிழ் வேந்தர்களாயினும் குறுநில மன்னர்களாயினும் நிலக் கிழார்களாயினும் அனைவரும் பாணர், பொருநர், கூத்தர், வயிரியர் எனப் பலவாறு அழைக்கப்படும், அன்றைய வாய்மொழி இலக்கிய வல்லுநர்களோடு, புலவர்களையும் பெரிதும் போற்றிப் புறந்தந்தனர். ஏன்? இன்று அரிய செயல் புரியும் பெரியவர்தம் புகழை, ஊடகங்கள் பதிவு செய்கின்றன. அவையே செய்திப் பரிமாற்றக் கருவிகளாகவுள்ளன. அன்று இப் பணியை மேற்கொண்டவர்கள், முன் கூறிய பாணர் பரம்பரையினரும் புலவர்களுமேயாம். அதனால் மன்னர்களிடத்தும் மக்களிடத்தும் பெரும் மதிப்பு இருந்தது.

புலவர்கள் ஏனைய மன்னர்தம் திருவோலக்க மண்டபங்களில், அரண்மனைகளில் பாடியுள்ளனர். சிலபோது போர்க்களத்திலேயே நின்றும்;

காட்டிடையே கண்டும்; வேண்டுமென்று அரண்மனைக்கே சென்றும்; வாயில்களில் நின்றும் பாடியுள்ளனர்.

ஆயினும் பாண்டியர்க்கு மட்டும் 'அவையம்' என ஓரமைப்பை, உருவாக்கும் எண்ணம், கடல்கோள்களால்தான் ஏற்பட்டிருக்க வேண்டும். சேர சோழர்க்கு கடல்கோள்களால் கடல்ஓர நகரங்கள், பட்டினங்கள் கரைந்து மூழ்கியதுண்டு. தென்திசையில் ஏற்பட்ட பெருங்கடல் கோள்களாலேதான், அனைத்து மன்னர், வேந்தர், பிறர் பற்றிய பாடல்களையும் சேர்த்து, 'தொகுப்பு' நூல்கள் கொணரும் எண்ணம் ஏற்பட்டிருக்க வேண்டும். இதை ஒப்புக்கொள்ள ஆழ்ந்த ஆராய்ச்சி அறிவு தேவை இல்லை. உலகச் செவ்வியல் இலக்கியங்களில் தமிழுக்கு மட்டுமே இச் சோதனை அமைந்துபோனது.

இந்த நெடுஞ்செழியனை வாழ்த்திய மாங்குடி மருதனாரைப் பற்றி, இச் செழியனே, ஒருமுறை வஞ்சினம் கூறுங்காலை,

'மாங்குடி மருதன் தலைவனாகப்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை' (புறம்.72)

என்று சொல்கின்றான். அவ்வாறாயின் இவன் காலம் வரை அவையம் இருந்ததும், அதற்கொரு தலைமைப் புலவர் இருந்ததும் உறுதிப்படுகிறது. (நிலவரை—என்நாட்டு எல்லை. வரைக—நீக்குக).

கலித்தொகை இதைமேலும் உறுதிப்படுத்துகிறது – தலைவன் இளவேனிலில் (சித்திரை, வைகாசி) திரும்பி வருவதாகக் கூறிச் சென்றான். இளவேனில் வசந்த காலம் எனப்படும்; இன்பம் துய்க்கும் காலம். அவ் இளவேனிலில்தானே தலைவர் திரும்பிவிடுவதாகச் சொன்னார். அப்பருவம் வந்தும் வந்திலரே என்பது தலைவியது ஏக்கம். மூன்று தாழிசைகளில் இளவேனிலைப் புனையும் அவள், அவற்றுள் ஒரு தாழிசையில் கூறுவது இது.

நிலன்நாவில் திரிதரூஉம் நீண்மாடக் கூடலார்
புலன்நாவில் பிறந்தசொல் புதிதுண்ணும்
பொழுதன்றோ? (35)

தலைவர் திரும்புவதாகச் சொன்னது என்ற இதில், அவையத்தில் அனைவரும் கூடியிருந்து புதிய புதிய இலக்கிய நூல்களைச் சொல்லக் கேட்டுச் சுவைத்த செய்தி வருகிறது 'புலன் நாவில் பிறந்த சொல் புதிது' – என்பது புதிய நூல்களையே குறிக்கும். புதிய நூல்களைக் கேட்டு இளவேனிற் காலத்தைக் கொண்டாடிய தமிழர்களாலேதான், இத்தனை இனிய நூல்கள் தோன்றின போலும்! (நிலன் நாவில் திரிதரூஉம் – உலக மக்களின் நாவில் புகழப்படும். அதுநீண்ட – மாடமாளிகைகளையுடைய கூடல்மாநகரம். புலன் நா – புலவர்தம் இலக்கியம் பாடும் நா. பிறந்த சொல் – அவர்கள் படைத்த இலக்கியம். புதிதாக அரங்கேற்ற அதைக்கேட்டு இன்பம் நுகரும் இளவேனில்.)

இக் கலிப்பாடலில் வரும் மூன்று தாழிசைகளும், மீண்டும் ஒருமித்து ஒப்ப நோக்கப்பட வேண்டும். இளவேனில் புனைவு இது. தலைவன் வருவதாகச் சொன்ன வசந்த காலம். முதல் தாழிசை இயற்கை பூத்துக் குலுங்குவதைக் குறிக்கின்றது. இரண்டாவது தாழிசை காதலர் காமன் விழாவெடுத்துக் கூடி இன்புற்று மகிழ்வதைக் குறிக்கின்றது. மூன்றாம் தாழிசை அதே இளவேனிலில், புலமை மிக்க அறிஞர்களின் நாவிலே பிறந்த புதிய நூல்களை, மக்கள் கேட்டு மகிழ்வதைக் குறிக்கின்றது.

இதிலிருந்து :

1. மன்னன் உட்பட அனைவரும் கூடிய அவையம் இருந்தமை
2. புலவர்கள் புதியபுதிய நூல்களை அரங்கேற்றிப் படித்தளித்தமை
3. அதை அனைவரும் கேட்டுச் சுவைத்து மகிழ்ந்தமை இவை யாவும் அறியப்படுகின்றன. இதுவே காலப்போக்கில் சமயவிழாஆகி. சித்திரைத் திருவிழா ஆனது; வையையாற்று விழாஆனது எனில் தவறாகாது. அவையம் கூடல்மா நகரிலே இருந்தமைக்கு வேறு என்ன சான்று வேண்டும்? இதனால் அகப்பாடல் மரபின்படி பார்த்தால், இதிலுள்ள மெய்ம்மை நன்கு அறியப்படும். அன்று முதுவேனிலில் பிரிந்த தலைவன் கார்காலத்தில் வருவதாகச் சொல்லிச் செல்வான். பின்பனியில் பிரியும் தலைவன், இளவேனிலில் திருமபுவதாகச் சொல்லிச் செல்வான். இவ்வாறு நோக்கும்பொழுது சிறு பிரிவுகள் இரண்டுமாத இடைவெளியுடையனவாகத்

ோற்றுகின்றன. நீண்ட காலமாயினும் கார் காலமும் இளவேனிற் காலமும் ந்து விட்டால் காதலர் பிரிவுத்துயர் மிகும்.

இப்பாடலில் தலைவி, தலைவன் திரும்புவதாக நம்மிடம் சான்னது, இந்த இளவேனிற் காலமல்லவா? இப்பருவம் வந்தும் அவர் ந்திலரே எனத் தோழியிடம் வருந்திக் கூறும் பகுதி இது. இப் பருவம் இளவேனில்' என்பதை மூன்று தாழிசைகளில் அவள் விவரிக்கின்றாள். ாலை பாடிய பெருங்கடுங்கோ என்னும் அரசப்புலவன் பாடிய, பாலைக் லிப் பாட்டு இது.

அதில் தலைவி கூற்றாக வரும் மூன்று தாழிசைகளையுமே காண்போம்.

வண்ணவண்டு இமிர்ந்துஆனா வையைவார் உயர்எக்கர்த்
தண்ணருவி நறுமுல்லைத் தாதுண்ணும் பொழுதன்றோ,
கண்ணிலா நீர்மல்கக் கவவிநாம் விடுத்தக்கால்
ஒண்ணுதால் நமக்குஅவர் வருதும்என்று உரைத்ததை

(கண்ணில் நில்லாது நீர்கொட்ட, தழுவி(கவவி) நாம் அவரைப் பிரிய விடுத்தபோது, அவர் நமக்குத் திரும்பி வருங்காலமாக உரைத்தது, நிறமுள்ள வண்டுகள் ஒலித்து, வையை மணல் மேடுகளில், குளிர்ந்த நீர் அருவிபோல் கொட்டுமிடங்களில் பூத்த நறிய முல்லை மலர்களில் தேனுண்ணும் இந்த இளவேனிற் காலமல்லவா?)

மல்கிய துருத்தியுள் மகிழ்துணைப் புணர்ந்தவர்
வில்லவன் விழாவினுள் விளையாடும் பொழுதன்றோ,
வலனாக வினைஎன்று வணங்கிநாம் விடுத்தக்கால்
ஒளியிழாய் நமக்கு அவர் வருதும் என்று உரைத்ததை

(ஒளியிழாய்! தோழி! நீர் எடுத்த காரியத்தில் வெல்க என்று, வணங்கி நாம் அவரைப் பிரிய விடுத்த போது, அவர் திரும்பி வருவதாக நம்மிடம் உரைத்த காலம், நீர் நிறைந்த ஆற்றிடைக் குறையிலே (ஆற்றின் நடுவேயுள்ள மணல் மேடுகள் – துருத்தி எனப்படும்); தங்களின் மகிழ்ச்சிக்குரிய காதலர்களைக் கூடியவர்கள், காமனுக்கு விழா எடுக்கும்போது, இன்புற்று விளையாடும்இவ் இளவேனிற்பருவமல்லவா?

நிலன்நாவில் திரிதரூஉம் நீள்மாடக் கூடலார்
புலன்நாவில் பிறந்தசொல் புதிதுஉண்ணும் பொழுதன்றோ,
பலநாடு நெஞ்சினேம் பரிந்துநாம் விடுத்தக்கால்
சுடரிழாய் நமக்குஅவர் வருதும் என்று உரைத்ததை

(பலவாறு எண்ணிய மனத்துடன் வருந்தி நாம் அவரைப் பிரிய விடுத்தபோது, அவர் திரும்பி வருவதாக நமக்குச் சொன்னது, நிலவுலகமக்களின் நாவிலே புகழப்பெறும், உயர்ந்த மாடங்களையுடைய கூடல் நகரத்திலுள்ளார், அறிவினையுடைய புலவோர், நாவில் பிறந்த கவிதைகளாகிய புதிய நூல்களைக் கேட்டு மகிழும் (உண்ணும்) இவ் இளவேனிற் காலமல்லவா?

கூடல் மாநகரில் இளவேனிலில் மக்கள் மகிழ்ச்சி விழாவும் காதலர் காமன்விழாவும் கல்விப்புலமை சான்ற அரங்கேற்ற விழாவும் நடந்துள என்பதை, இவை அழுத்தம்பெறக் கூறுகின்றன.

கூட்டுண்ணும் மதுரை மாநகரம்

பிறிதொரு கலிப்பாடலும் இதனைக் குறிப்பிடுகிறது.

பொதுமொழி பிறர்க்கின்றி முழுதாளும் செல்வர்க்கு
மதிமொழி இடல்மாலை வினைவர்போல் வல்லவர்
செதுமொழி சீத்த செவிசெறு வாக
முதுமொழி நீராப் புலன்நா உழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர (68)

மருதக்கலியில் வரும் இப் பாடலை, மருதன் இளநாகனார் பாடியுள்ளார். பெருங்கடுங்கோ கூற்றுடன் இது பெரிதும் ஒத்துவருவது கருதத்தக்கது. 'புலன் நா உழவரின் புதுமொழி கூட்டுண்ணுதல்' கூடல் மக்களிடம் பெருவழக்காக இருந்துளது.

பொதுமொழி பிறர்க்கு இன்றி முழுதாளும் செல்வர் —உலகம் முழுவதையும் பிறர்க்கும் பொது என்று இல்லாமல் தாமே முழுவதும் ஆளும் வேந்தர்கள். மதிமொழி—அறிவுரை. இடல் மாலை வினைவர்

போல் — எடுத்துரைத்தலை இயல்பாகவுடைய அமைச்சரைப்போன்ற. வல்லவர் — நூல் எழுதும் வல்லமை மிக்க புலமைச் சான்றோர். இவர்கள் நூல்களை அரங்கேற்றுவர்.

கேட்கும் அவையோர் யார் தெரியுமா? செதுமொழி சீத்த — பொல்லாத சொற்களைக் கேளாது நீக்கிய செவி செறுவாக — அவர்களுடைய செவிகளே வயலாக. முதுமொழி நீரா—முன்னைய சான்றோர்தம் இலக்கியங்களே நீராக. புலன் நா உழவர்—அறிவினையுடைய நாவாகிய ஏராலே உழுது, வாழும் புலவர்களாகிய உழவர்களின், புதுமொழி — புதிய அறுவடையாகிய புதியபுதிய நூல்களை. கூட்டுண்ணும் — அவையிற் கூடியிருந்து கேட்டுச் சுவைக்கும். புரிசை சூழ் புனலூர — மதில் சூழ்ந்த மதுரை நகரத் தலைவனே.

இவை அனைத்தும் பாண்டியர் தலை நகரில் 'அவையம்' என ஒன்று இருந்ததைத் தவிர வேறு எதைக் காட்டுகின்றன?

பின்னர் புத்தநெறி பரவியதால் 'சங்கம்' என்ற சொல் புகுந்தது. அதனால் தமிழரின் அவையத்தையும் சங்கம் என அழைக்கும் பழக்கம் ஏற்பட்டது.

இலக்கியம் சொற்களாலானது. எனவே சொற்கள் பற்றி கருத்துக்கள் தொல்காப்பியம் முழுவதும் நிரம்பிக் கிடக்கின்றன. அவற்றுள் சிலவற்றை அறிமுகம் செய்துகொள்வோம்.

தொல்காப்பியச் சொற்சுவைகள்

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே — அதைத்
தொழுது படித்திடடி பாப்பா

என்றார், இருபதாம் நூற்றாண்டு எழுச்சிக் கவிஞர் பாரதியார்.

தனிமைச் சுவையுள்ள சொல்லை — எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாம் கண்டதில்லை

என்றார், புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன். தமிழ்ச்சொல்லின் பெருமையைக் கம்பர் மிகவும் சிறப்பித்துப் பல இடங்களில் குறிப்பிடுகின்றார். இராமனின் அம்பு இலக்குத் தப்பாது. அந்த வில்லுக்கு இணையானது சொல் என்பார் அவர். 'சொல் ஒக்கும் கடியவேகச் சுடுசரம்' (தாடகை வதை) என்பார். இராமனிடம் விசுவாமித்திரன், 'நின்கைச் சுடுசரம் அனைய சொல்லால் கவுதம முனிவன் அகலிகை மீது சாபமிட்டான்' என்று கூறுகின்றார். முன்னதில் சொல்லைச் சுடுசரத்திற்கு (எய்யப்பட்டுச் சுடும் அம்பு) உவமை சொன்னதையும், பின்னதில் சுடுசரத்தைச் சொல்லுக்கு உவமை சொல்லியிருப்பதையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

'செவ்விய மதுரம்சேர்ந்த நற்பொருளின் சீரிய கூரிய தீஞ்சொற் கவிஞர்களும் வடநூற் புலவர்களும் புகழ்ந்த அயோத்திமாநகரம் (93) என்னும்போது தமிழ்க் கவிதைச் சொல்லுக்கு ஆறு அடைமொழிகளை ஒரே தொடரில் பெய்துள்ளார், கம்பர். செவ்விது, மதுரம் சேர்ந்தது, நற்பொருள் தருவது, சீரியது, கூரியது, இனியது – இவை ஆறும் தமிழை, 'கனியிடை ஏறிய சுளை' எனக் காட்டுகின்றன.

சொல்மரபுகள்

முப்பத்து நான்கு இலக்கிய உறுப்புகளுள் 'மரபு' என்பதும் ஒன்று. 'புலனெறி வழக்கு' என்பதற்கும் 'மரபு' என்பதற்கும் வேறுபாடு தெரிதல் வேண்டும். இன்று நாம் Literary Convention – இலக்கிய மரபு என ஆள்வதையே தொல்லாசான் 'புலன்–நெறி–வழக்கு=புலவர்களால் வழிவழியாகக் கையாளப்பட்டு வரும் வழக்கு, என்று கூறுகிறார். மரபு–

என்பது 'சொல்' மரபுகளையே யாகும். செய்யுளியலில் அதை விளக்குமிடத்தில்,

மரபே தானும்
நாற்சொல் இயலான் யாப்புவழிப் பட்டன்று (1377)

யாப்பு—என்பது இலக்கிய வகை. பாட்டு, உரை, நூல், மந்திரம், விடுகதை(பிசி), அங்கதம், பழமொழி எனும் இவற்றை இலக்கியத்திற்குரிய இயற்சொல், திரிசெல், திசைச்செல், வடசொல் எனும் நான்கு சொற்களைக் கொண்டு படைத்தல் வேண்டும்.

மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை
மரபு வழிப்பட்ட சொல்லி னான (1590)

என வேறு ஒரு இடத்திலும் 'மரபு வழிப்பட்ட சொல்' என்று இதையே கூறுவார்.

இதற்காக 'மரபியல்' என ஒரு தனி இயலே வகுக்கின்றார். இதில் வரும் கருத்துக்களின் அடிப்படையில் பிற்காலத்தில் எத்தனையோ தனி நூல்கள், அகராதிகள் எழுதப்பட்டிருக்கவேண்டும்.

ஒரு மொழியின் இலக்கணத்தை முற்ற முடிய எழுதமுடியாது. முன் மாதிரிகள் காட்டி வழிகாட்டத்தான் முடியும். ஆனால் காலந்தோறும் உரையாசிரியர்கள் சில விளக்கங்கள் தந்துள்ளமை மட்டுமே இன்று நமக்குப் பேருதவியாக உளது.

இன்றாவது நாம் தவறவிட்ட அப்பணியைத் தொடங்க வேண்டும்.

அகத்திணைப் பாடல்களில் முதலும் கருவும் முற்றிலும் இயற்கை சார்ந்தவை. அவற்றில் சிற்றுயிர்கள் முதல், மரம் செடி, கொடி வரை இடம்பெறுகின்றன. அவற்றை மரபறிந்து பயன்படுத்த வேண்டும். வாழை இலை, தாழை மடல் என்று சொல்லவேண்டும். இதைமாற்றி வாழை மடல், தாழை இலை என்பது மரபுப் பிறழ்ச்சி. மக்கள் சில காரணம் கருதி வழிவழியாகக் கூறியபடியே கூறினால்தான் அது எல்லோர்க்கும் விளங்கும். இவ்வாறு அகத்திணைப் பாடல்களுக்குக் கூறியவற்றைப் பிறகு

பொதுமைப் படுத்தி, மிக விரிவாகத் தொகுத்து விளக்கியிருக்கவேண்டும்.

தமிழர்கள் இத்தகைய பலவற்றில் சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளைகளாகவே இருந்துவிட்டார்கள்.

எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே (388)

என்று நன்னூலார் இதைப் பொதுப்படக் கூறியுள்ளமை கருதற்பாலது. ஆடுமேய்ப்பவனை இடையன் என்பதும் யானை மேய்ப்பவனைப் பாகன் என்பதும் மரபு பன்றிக்குட்டி, யானைக் கன்று எனலாம். ஆட்டுப் புழுக்கை, மாட்டுச்சாணம் என்பர்.

தொல்காப்பியர் உயிரினங்களின் இளமைப் பெயர்களை எவ்வாறு சொல்ல வேண்டும் – மரபு எது என்பதை முதலில் விளக்குகின்றார். பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மகவு, மறி, குழவி, போத்து என்பன அவர் சுட்டுவன.

மாஞ்செடி, மலர்க்கொடி, வேப்பங்கன்று, தென்னம்பிள்ளை, அணில்குட்டி, பறவைப் பார்ப்பு என இவ்வாறு தொகுத்துப் பார்க்க வேண்டும். பார்ப்பு என்பதிலிருந்தே பாப்பா என்ற சொல் வந்ததென்பர்.

அடுத்துத் தொல்காப்பியர் ஆண்பாற் பெயர்களைச் சுருக்கமாகப் பட்டியலிட்டு, முன் மாதிரியாகத் தருகின்றார்.

எருது, காளை, ஏறு, ஏற்றை, ஒருத்தல், களிறு, சே(காளை), சேவல், இரலை(மான்), கலை(மான்), உழை(மான்), முசு(குரங்கு), மோத்தை(ஆடு), தகர்(ஆடு), உதள்(ஆடு) அப்பர்(ஆடு), போத்து, கண்டி (எருமை), கடுவன்(குரங்கு), ஆண்(பொது).

ஆண் யானை – களிறு, பெண் யானை – பிடி, யானை கூட்டத்தின் தலைமையானை ஒருத்தல்.

கலைமான் – ஆண். பிணைமான் – பெண். ஏறுதழுவுதல் காளைமாட்டை அடக்குதல், கடுவன்–ஆண் குரங்கு, மந்தி–பெண்குரங்கு,

தகர்—திருக்குறளில் வருகிறது; ஆட்டுக் கடாவைக் குறிக்கும். சேவற் கோழி, பெட்டைக் கோழி.

இவை சில பழம்பாடல்களில் வரும்; மற்றும் சில இன்றும் வழக்கிலுள்ளன. புதியன பல வட்டார வழக்குகளிற் கிடைக்கும்.

பெண்பாற்பெயர்கள் : பேடை, பெடை, பெட்டை, பிணை, பிணவு, பிணவல், பிணா, பெண், ஆ, மூடு(ஆடு), நாகு, கடமை, அளகு, மந்தி, பாட்டி, பிடி.

தொல்காப்பியர் குரங்கின் ஆணினைக் கடுவன் என்பதும், கூகையைக் கோட்டான் என்பதும், கிளியினைத் தத்தை என்பதும், வெருகு என்பதைப் பூசை (காட்டுப்பூனை) என்பதும் குதிரையைச் சேவல் என்பதும், பன்றியை ஏனம் என்பதும், எருமையைக் கண்டி என்பதும், தம் காலத்தில் புதிதாகப் புகுந்துவிட்ட வழக்கு என்பது, இப் புதியவற்றை நீக்க முடியாது என்றும் கூறுகின்றார்.

முடியவந்த அவ் வழக்கு உண்மையின்
கடிய லாகா கடன் அறிந் தோர்க்கே (1568)

இவை சங்கப்பாடல்களில் இயல்பாக வந்துவிட்டன. இவற்றைப் புதிதாக வந்தவை என்பதால் தொல்காப்பியம் அவற்றுக்கு முந்தியது என்பது பெறப்படும்.

அது போல, இன்று புதிதாக வந்துவிட்ட மாறிவிட்டவற்றையும் மக்கள் வழக்கில் வந்துவிட்டால் ஏற்றேயாக வேண்டும்.

சரியான சொல் தெரியாவிட்டால் ஆண்குரங்கு, பெண்குரங்கு என ஆண்,பெண் என்றே கூறி விடலாம் என்பார் அவர். இன்றும் நாடுமுழுதும் தேடி, சிற்றூர் மக்கள், உழவர், தொழிலாளர்களுடன் பழகித் தொகுத்தால் இன்னும் எத்தனையோ ஆண்பாற் பெயர்கள், பெண்பாற் பெயர்கள் கிடைக்கக்கூடும்.

உள்ளே வயிரமுடையவற்றை மரம் என்றும் உள்ளே வயிரம் இல்லாதவற்றை – அதாவது உட்துளையுடையவற்றை ‘புல்’ என்றும்

கூறினராம், முற்காலத் தமிழர். இன்று 'புல்லாங்குழல்' என்பது, மூங்கிற் குழாயில் செய்வது; அதனுடன் உட்துளையுடைய பலவற்றிலும் குழல் ஊதும் பழக்கம் இருந்ததைச் சிலப்பதிகாரம் கூறுகிறது (ஆம்பலம் தீங்குழல், கொன்றையம் தீங்குழல்) புல்—என்ற சொல்லின் வழக்காறு, இன்றும் குழலுடன் ஒட்டிக்கொண்டிருக்கிறதல்லவா?

புல்—(மரவகை)யின் உறுப்புக்களைப் பற்றி ஒரு பட்டியல் தருகிறது, தொல்காப்பியம் :

தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பாளை, ஈர்க்கு, குலை இவை போல்வன பிறவும் புல்மர வகைகளின் உறுப்புக்களின் பெயர்கள்.

மரவகைகளின் உறுப்புக்கள் பற்றிய பெயர்கள் :

இலை, முறி (முற்றிய தளிர்), தளிர், கோடு, சினை, குழை, பூ, அரும்பு, நனை என இவைபோல்வன பல. மேலும் காய், பழம், தோல், செதிள், வீழ் (விழுது) என்பனவும் குறிக்கப்படுகின்றன.

பனை ஓலை, பனைஏடு, தென்னம்பாளை, தென்னங்கீற்று(அதன் உள் உறுப்பு ஈர்க்கு). வாழைத் தாறு, நுங்குக் குலை, இளநீர் முற்றிக் காயாகிறது — அதுவே தெங்கங்காய், தேங்காய். மாம்பூவை முன்பு மாநனை என்றார்கள். முல்லை அரும்பு, பிச்சிப்பூ, தாமரை மலர், மாந்தளிர், ஆலம் விழுது.

இவை போலத் தொகுத்து அகராதிகளாக, இளையோர்க்கு வழங்க வேண்டும்.

நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்
திரிவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும் (1589)

இந்த உலகம் மண், தீ, நீர், காற்று, ஆகாயம் எனும் ஐம்பூதங்களின் சேர்க்கைக் கலவையாலானது. எனவே இவ்வுலகைப் பற்றிய எல்லாவற்றையும் அவற்றிற்குரிய சொற்களாலேயே குறிக்க வேண்டியுளது. அவற்றை உயர்திணை, அஃறிணை எனவும் ஆண் பெண் பலர் ஒன்று

பல என்னும் ஐம்பாலாகவும் கொண்டு; அவை பற்றிய இயல்பு மாறாதவாறு, பொருள் திரிபில்லாத சொற்களுடன் தழுவிக் கூறவேண்டும்.

சொல்மரபு மாறினால், கருத்துப் பகிர்வு தடைப்படும் ; ஒருவருக்கொருவர் புரியும்படி பேசவும் இயலாது.

பொது—மரபுச்சொல் அகரவரிசை

தொல்காப்பியர் நமக்கு வழிகாட்டியபடி, நாம் சில மரபுச் சொல் அகரவரிசைகளைத் தொகுத்திருக்க வேண்டும். அது தமிழின் சொல் வளத்தையும் அதன் நீண்டகால வளர்ச்சியையும் அறிய உதவியிருக்கும். தவறு, தப்பு, பிழை என்றாற் போல்வன ஒருபொருட் சொற்கள் போலத் தோன்றினும், சில சிறிய நுட்பமான நிழற்பொருள்களை உடையன. இன்று கணினியில் தட்டச்சு செய்யும்போது விடுவன தவறு எனப்படும். அவை தவறி விழுவன. தப்பு—அறியாமையால் செய்வது. பிழை—பிறர்க்குத் தீங்கு விளைவிக்குமளவு கடுமையானது. ‘எழுத்துப் பிழை’ என்று இன்று சொல்வது, அதன் கடுமையான விளைவுபற்றியேயாம்.

வணங்குதல், கும்பிடுதல், தொழுதல் – ஒரு பொருளனவே; எனினும் நிழற்பொருளால் இவற்றை இடம் நோக்கியும் ஆள்கின்றோம். தொலைபேசியை எடுத்ததும் ‘வணக்கம்’ என எதிர்க்குரல் கேட்கின்றது. நண்பரைக் கண்டதும் வணக்கம் சொல்கின்றோம். ஆசிரியருக்கு மாணவன் வணக்கம் சொல்கின்றான். கோயிலில் தெய்வத்தைக் கைகூப்பிக் கும்பிடுகிறோம். சான்றோரை, வயதில் மூத்த பெரியவர்களைக் கும்பிடுவர். அதில் கைகூப்பும் மெய்ப்பாடு உளது. தொழுதல் – கடவுளைத் தொழுதல் வேண்டும். ‘தெய்வம் தொழாஅள் கொடுநன் தொழுதெழுவாள்’ (55) எனும் குறள் காண்க. ‘வாலறிவன் நற்றாள் தொழாஅ ரெனின்’ என்பதும் காண்க. வணங்குதல் என்றால் நேர் பொருள் வளைதல் என்பது. சப்பானியர்கள் இடுப்பை வளைத்துக் குனிந்து வணங்குவார்கள். தொழுதல் இறை வழிபாட்டின் முடிநிலையாகும். அடியார்களைத் தொழும்பர் எனபர். தொழுதல் உள்ளத்தின்பாற்பட்டது. ஆடிப்பாடித் தொழுவர். இசுலாமியர் ‘தொழுகை’ என்றது மிகச்சிறந்த கருத்து.

உணவுண்ணுதல் பற்றிப் பல சொற்கள் உள்ளன. உணவு வகைகளும் பல, உண்ணும் முறைகளும் பல. பொதுவாக உணவுண்டான் எனலாம். தின்றான் என்பது கறிவகையை இறைச்சியைத் தின்னுதல் எனலாம். விருந்தினரை 'உண்ணுட்டுப் போங்கள்', 'சாப்பிட்டிட்டுப் போங்கள்' எனலாம்; தின்னுட்டுப் போங்கள் எனலாமா? சுவையான உணவைச் சப்பிட்டான், சாப்பிட்டான் என்பர். இனிப்பு மிட்டாயை சப்பித்தின்பர். பாலைப் பருகுவர். பாயசத்தை அருந்துவர் (சிறிது சிறிதாக அருந்துதல்). தண்ணீரைக் குடிப்பர். வெற்றிலை போட்டு மென்று கொண்டிருப்பர். சிலர் பழங்களை விழுங்குவர். சற்றுக் கடினமானதைக் கறித்தல் – நன்கு கடித்துத் தின்னுதல் பசித்தவர் புசித்தல் முதல் இன்னும்பல சொற்கள் உள.

சில அரும்புகளாகவே காட்சிதரும், முல்லை அரும்பு போல. சில மல்லிகை போலப் பூக்களாக மலர்ந்ததும் மலராதது போல விளங்கும் மற்றும் சிறிது கூடிதலாக விரிவன, அலர் எனப்படும். வேறுசில மலர்களாக, நன்கு விரியும். இவைஒருபொருட் சொற்களெனினும் நிழற்பொருளுடையன.

ஒன்றன் வளர்ச்சிநிலைக் கேற்பச் சொற்களை உருவாக்கியுள்ளமை தமிழின் வளர்ச்சியைக் காட்டும். வெறுமனே தமிழ் தொன்மை உடையது; வளமை உடையது; சிறந்தது என்று பலபடப் பேசிப்பேசி மகிழ்வதை, மிகைபடாமல் குறைக்குங்காலம் வந்து விட்டது. தமிழின் சிறந்த கூறுகளை எடுத்துக் காட்டுவதோடு நாம் நின்றுவிடவேண்டும். சிறந்தது, வளமைமிக்கது, தொன்மையானது என்பதைப் பிறர் சொல்ல வைக்கவேண்டும்.

கருக்காய்–இன்னும் உருக்கொள்ளவில்லை. காய்–நன்கு முதிரும் வளர்ச்சி நிலை. பழம்–முதிர்ந்து பழுத்த நிலை. கனி – இளகிக் கனிந்துவிட்ட நிலை. சில காயிலே இனிக்கும்; சில பழமாகும்போது இனிக்கும். கனியான பின் இனிப்பன பல. மாங்கனி. பலாப்பழம், நெல்லிக்காய் – என உண்ணத் தகும் பருவப்படி, கூறப்படுவன பல.

முகை, மொக்குள், மொட்டு – சிறு சிறு வளர்ச்சிகாட்டுவன. அரும்பு, பூ, போது, அலர், மலர், செம்மல் பழம் பூ, சாம்பல்(வாடி உதிர்ந்த பூ), சில பூக்களை எடுத்தால் போதும்; தொட்டால் கையில்

வந்துவிடும். சிலவற்றைக் கொத்துக் கொத்தாகப் பூப்பன வாதலால் கொய்தல் வேண்டும். மற்றும் சில முட்செடிகளுக்குள் இருப்பனவற்றைப் 'பூப் பறிக்க' வேண்டும்.

கூவுதல் (குயில்), அகவுதல்(மயில்), கரைதல்(காக்கை), குழறுதல்(கூகை, கோட்டான்), பேசுதல்(கிளி), கர்ச்சித்தல்(சிங்கம்), பிளிறுதல்(யானை), கனைத்தல்(குதிரை), கத்துதல்(கழுதை). குரைத்தல்(நாய்), உருமுதல்(புலி) – இன்னும் எத்தனை, எத்தனையோ? இவை குழந்தைகளுக்காக மட்டுமல்ல; பெரியவர்களுக்கும் அகராதிகளாகத் தொகுக்க வேண்டும்.

உரைத்துப் பார்த்துப் பொன்னைத் தரம் பிரிப்பர். உரைத்தல்– விளக்கிச் சொல்லுதல். (விளக்குதலும் சொல்லுதலும் அதனுட்படும்) உரையாசிரியர்கள் முதலில் வாயால் உரைத்து. மாணவர்களுக்கு விளக்கியதையே பின்னர் ஏட்டில் எழுதியபோதும் அதை 'உரை' என்றனர். இன்று குறிப்புரை, விரிவுரை, விளக்கவுரை எனப் பல்கிவிட்டன. ஆசிரியர்களும் உரையாளர், விரிவுரையாளர் ஆகிவிட்டனர்.

கூற்று தன் கருத்தை வெளிப்படுத்துதல். இதற்கு விடை கூறு – மறுமொழி பகர் என்பர். சங்க இலக்கியத்தில் வரும். தலைவன், தலைவி முதலியவர் கூற்றுக்கள் அவரவர் கருத்து வெளிப்பாடுகளாகும். செப்பினான் என்பதும் விடை பகர்தலேயாகும். விடை கூறுதல்– ஒன்றனைப்பற்றிய கருத்தைத் தான் அறிந்தபடி 'பதில்' கூறுதல்.

பகர்தல் – விலை பகர்தல் என்பர். இது வாய்விட்டுச் சொல்லுதலுமாம் . விலை கூறி விற்குமுன் விலைக்குப் பொருள் உளது எனப் பகர்வர். கழறுதல் – இடித்துரைத்தல். பன்னுதல்–ஒன்றையே திரும்பத்திரும்பப் பேசுதல். மொழிதல்–அரும்பெரும் சொற்களை மொழிவர். நவிலுதல்–அறவுரைகளை நவிலுதல். நுவலுதலும் உண்டு. கரைதல்– நெகிழ்ந்து பேசுதல். விளம்புதல்–ஒன்றையே திரும்பத் திரும்பப் பேசுதல். இதிலிருந்து வந்த புதுச்சொல்லே, விளம்பரம் என்பது. பொழிந்து தள்ளிவிட்டான் என்பர். பொழிதல்–சொற்பொழிதல். இதுபோல நாற்பதுக்கு

மேற்பட்ட சொற்களை மொழிஞாயிறு பாவாணர் தொகுத்துரைத்துள்ளார்.

தொல்காப்பியர் மரபுப்படி, இலக்கியத்தில் ஆளுமாறு கூறிய நான்குவகைச் சொற்கள், தனித்தனியே விரிவாக அறியத்தக்கன.

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே (880)

இவற்றை ஒவ்வொன்றாக ஆசான் விளக்குகின்றார். 'இயற்சொல்' என்பது எது? இயல்பாக நாம் அன்றாடம் வழங்குகின்ற சொல். நிலம், நீர், தீ, காலம், உலகம், வாழ்க்கை என அனைத்தும்.

அவற்றுள்
இயற்சொல் தாமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமை இசைக்கும் சொல்லே (881)

வடவேங்கடம் தென்குமரியிடையேயுள்ள தமிழகத்தில், எல்லோர்க்கும் விளங்கும் தம்பொருள் மாறாது உலகவழக்கில் பேசப்படும் அனைத்தும் இயற்சொல் எனப்படும்.

அடுத்துத் திரிசொல் என்பது எது? திரித்து வழங்கும் சொல். ஓர் இயற்சொல்லையே திரித்து வழங்கலும் உண்டு. ஒரு சொல்லை வைத்துக்கொண்டு அதே பொருள்தரும் பலசொற்களைப் படைத்தலும் உண்டு; ஒரு சொல்லுக்கே பல பொருள் தருமாறு அதைப் பல இடங்களில் ஆளுதலும் உண்டு.

சிலபோது சொல்லைத் திரித்து வழங்குவர். உலகில் கொச்சையாகத் திரித்து வழங்குவன வேறு. குருவி—குரீஇ மருவி—மரீஇ என வேண்டுமென்று திரித்து வழங்குவன இவை; ஆண், பெண் என்பன ஆண்யானை, பெண்யானை என்றும் கூறக் கூடும்: களிறு, பிடி எனத் தெரியாதவர் அவ்வாறு வழங்கலாம். மனிதரில் மட்டுமே ஆண், பெண்ணைக் குறிக்க ஆடூஉ அறிசொல், மகடூஉஅறிசொல் என வழங்கினர். ஆடூ, மகடூ எனப் பேச்சில் வழங்கியிருக்கலாம்.

ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
இருபாற்று என்ப திரிசொற் கிளவி

ஒரே சொல்லுடன் தொடர்புபடுத்திப் பல சொற்களை வழங்குவர். புலவர்கள் இலக்கியத்திற்காகப் படைத்துக் கொள்வர். கறடு, பாறை, குன்று, மலை என்பன இயற்சொற்கள். மலை உயரமாக இருப்பதால் ஓங்கல் என்றும் நீளமாகக் கிடக்கைமுறையில் இருப்பதால் விலங்கல் என்றும் நாட்டிற்கு எல்லைபோலிருப்பதால் வரை என்றும் விளங்கித் தோன்றலால் பிறங்கல் என்றும் அடுக்கடுக்காய்க் காணப்படுதலால் அடுக்கல் என்றும் பெருங்கல் என்றும் இதுபோற் கூறப்படுவன இடம் நோக்கியும் புலவர் சொல்லாக்கத் திறன் நோக்கியும் விரிவதால் இவற்றைத் திரிசொற்கள் என்பர். வெற்பு, விண்டு என்பனவும் மலையைக் குறிப்பனவே.

அரங்கம்—ஆற்றிடைக்குறை (திருவரங்கம், ஸ்ரீரங்கம் எனில் பொருளில்லை), ஆடுமிடம், இல்லில் ஒருபக்கம்(அந்தரங்கம்), கருத்துரை யாடுமிடம் (கருத்தரங்கம்) என விரிவன ஒரே சொல்லுக்குப் பல பொருளாக நீள்வன.

மேலும் அன்னையை அஞ்ஞை எனல், மயிலை மஞ்ஞை எனல் கிளியைக் கிள்ளை எனல் என்பனவும் திரிசொல்லில் அடங்குமெனக் கருதலாம். இரீஇயினர். நிலையிற்று, என்றிசினோர் எனப் புலவர்கள் செய்யுள் நோக்கிக் கொள்வன வினைத்திரிசொற்கள். திருவள்ளுவர் 'சோகாப்பர்' என ஒரு சொல்லை ஆக்கிக் கொள்கிறார் (யாகாவாராயினும்—127). இதற்கு அல்லாப்பர், செம்மாப்பர் போல இதுவும் ஒரு சொல் எனப் பரிமேலழகர் விளக்கம் கூறுவர்.

திசைச்சொல்

தொல்காப்பியர் 'திசைச்சொல்' என்றதை முழுவதுமாக ஆராயாது, இடைக்காலத்து உரையாசிரியர்கள் சில எடுத்துக்காட்டுக்களுடன் நிறுத்தி விட்டனர். இவை தமிழின் கிளை மொழிகளில் வழங்குவன; வட்டார வழக்குகளாகத் தமிழ் இலக்கியத்தில் ஏறியமை பற்றியன. இவை

இருவகைப்படும். ஒன்று அவ்வவ் வட்டாரத்திற்குள் என வழங்கும் தனிச்சொற்கள். இரண்டு பொதுவான ஒரு சொல்லுக்கே அவ் வட்டாரத்தில் வேறு பொருள் உளதாகும். காரைக்குடி வட்டாரத்தார் சளி பிடித்தலைத் 'தடுமன்' என்பர் (முற்றிப்போனது). தொண்டு – எனும் பொதுச் சொல்லை, 'தொண்டு செய்கிறாய்' எனவசைச் சொல் ஆக்குவர் (விலை மாதர் தொழில்) கொங்கு நாட்டுச் சிற்றூர்ப்புற மக்கள். கேணி–கிணறு, இன்று சென்னையில் திருவல்லிக்கேணி என்பது குளத்தைக் குறிக்கிறது. 'அல்லிக் குளத்தருகே' என்று பாடுவார் பாரதியார்.

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தம்குறிப் பினவே திசைச் சொற் கிளவி (883)

செந்தமிழ் வழங்கும் தேயத்தைச் சேர்ந்த பன்னிருவகைப்பட்ட நிலப் பிரிவுகளிலும் வாழ்வோர் வழங்குவனவாய், அவ்வந் நிலத்தார்தம் குறிப்பின்வழிப் பொருளறியப்படுவன திசைச் சொற்கள். மேலே சுட்டிய தடுமன், தொண்டு போல்வன அவ்வந் நிலத்தவர்க்கே விளங்குவன. அதே பொருளில், மற்றவர்கள் அவர்தம் குறிப்பின்வழியின்றிப் பிறவாறு உணரார்.

தொல்காப்பியர் தமிழகத்தை அடுத்த 'பன்னிரு நிலத்தினும்' வட்டார வழக்கிருந்ததைக் கூறுகிறார். வடவேங்கடம் தென்குமரியிடைக் கிடந்த தமிழகத்தின் 'அடையும் புடையும் கிடந்தவை' இப் பன்னிரு நிலம் என்பது இளம்பூரணம். 'தங்குறிப்பின' என்பதால், இவை குறிப்பால் உணரவேண்டிய தமிழ்ச் சொற்களே – வட்டார வழக்குகளே என்பதில் ஐயமில்லை.

பன்னிரு நிலம்பற்றி உரையாசிரியர்கள் கூறியவற்றை ஒரு வெண்பாவாகப் பாடி வைத்துள்ளனர், பிற்காலத்தில்.

தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண், பூழி
பன்றி, அருவா, அதன்வடக்கு – நன்றாய
சீத, மலாடு, புனல்நாடு செந்தமிழ் சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்

இளம்பூரணர் காட்டுவன :

பொதுங்கர் நாடு	சீதநாடு
தென்பாண்டிநாடு	பூழிநாடு
ஒளிநாடு	மலைநாடு
குட்டநாடு	அருவாநாடு
பன்றிநாடு	அருவாவடதலைநாடு
கற்காநாடு	குடநாடு

இவற்றுள் பொதுங்கர்நாடு, ஒளிநாடு என்பன பெயர் மாற்றம் பெற்றனவோ என அறிதல் வேண்டும். இவை மேற் சுட்டிய பாடலில் குறிக்கப் படாதவை; இளம்பூரணர் குறித்தவை.

நச்சினார்க்கினியர் இவை பன்னிரண்டையும் சூழ்ந்த பிறிதொரு பன்னிரண்டு நாடுகளைக் குறிக்கின்றார். சிங்களம், பழந்தீவு, கொல்லம், கூபம், கொங்கணம், துளு, குடகம், துளுவம், கருநடம், கூடம், வடுகு, தெலுங்கு, கலிங்கம்.

நன்னூல் உரையில், பாரதியார் 'செப்புமொழி பதினெட்டுடையாள்' என்று கூறியதற்கேற்ப, ஒரு பாடல் காணப்படுகின்றது.

சிங்களம் சோனகம் சாவகம் சீனம் துளு குடகம்
கொங்கணம் கன்னடம் கொல்லம் தெலுங்கம் கலிங்கம் வங்கம்
கங்கம் மகதம் கடாரம் கவுடம் கடுங் குசலம்
தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ்புவி தாமிவையே

இதில் முற்காட்டிய நாடுகள் சிலவுமுள, வடமொழி சுட்டப்படவில்லை. இவற்றில் சீனம், சிங்களம், சோனகம், கடாரம் என்பன குறிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடற்பாலது. தமிழின் செல்வாக்கு இவை அனைத்திலும் பரவியிருத்தல்வேண்டும். பாரதியார் கூறுவனவற்றின் வேறாக, இவை கிழக்காசிய நாடுகளையும் குறிக்கின்றன. பாரத நாட்டிற்குள்ளேயே பதினெட்டு மொழிகளாகப் பிரிந்தனவென இவற்றை எண்ணவேண்டும்.

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் இவை பற்றி ஆராய்ந்துள்ளார், அண்மையில் தாய்லாந்தில் கண்டெடுக்கப்பட்ட முதுமக்கள்

தாழி, பானை ஓடுகளில் காணப்பட்டவை தமிழ் எழுத்துக்களே எனப் பிரெஞ்சு நாட்டுத் தொல்பொருள் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். அவை 'துறவோன்' எனப் படிக்கப்படுகின்றன. அறவணவடிகள் பற்றிய மணிமேகலைச் செய்திகள் , மணிபல்லவத் தீவு முதலியன உண்மையே என எண்ண இடம்தரும் இவை மேலாய்வுக்கு உரியன.

வட்டார வழக்குப்பற்றிய உதாரணங்களை, உரையாசிரியர்கள் தந்துள்ளனர். அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

தென்பாண்டிநாடு – பசுவைப் பெற்றம் என்பர், சோற்றைச் சொன்றி என்பர்.
குட்டநாடு – தாயை தள்ளை என்பர்
குடநாடு – தந்தையை அச்சன் என்பர்
கற்காநாடு – வஞ்சரைக் கையர் என்பர்
வேணாடு – தோட்டத்தைக் கிழார் என்பர்
பூழிநாடு – சிறுகுளத்தைப் பாழி என்பர். நாயை ஞமலி என்பர்
பன்றிநாடு – செறுவைச் செய் என்பர்
அருவாநாடு – சிறுகுளத்தைக் கேணி என்பர்
அருவாவடதலைநாடு – புளியை எகின் என்பர்
சீதநாடு – தோழனை எலுவன் என்பர்,
– தோழியை இகுளை என்பர்
மலையமான் நாடு – நீரை வெள்ளம் என்பர்
புனல்நாடு – தாயை ஆய் என்பர்
துளுநாட்டார் – மாமரத்தைக் கொக்கு என்பர்
தெலுங்கர் – உரைத்தலைச் செப்புதல் என்பர்
– எருத்தைப் பாண்டில் என்பர்.

இவை அனைத்தும் உரையாசிரியர்கள் காட்டியவை. இவை தவிர, இன்று குமரித் தமிழ் முதல் கொங்குத் தமிழ் வரை, யாழ்ப்பாணத் – தமிழ்ஈழ நாட்டுத் தமிழ்முதல் தமிழகத் தமிழ்வரை, சென்னைத் தமிழ் முதல் தென்பாண்டித் தமிழ் வரை – என இவ்வாறு வட்டார வழக்குகள்

பல்கியுள்ளன.

குயவர், தச்சர், பெருந்தச்சர்(சிற்பியர்), பிறபல கை வினைஞர், நெய்தல் தொழிலினர், உழவர்கள் வழங்கும் வல நூறாயிரம் சொற்கள் அகராதிகளில் இடம்பெறவில்லை. அவர்களின் தொழில் தொடர்பான கலைச்சொற்கள் ஆயிரம், பதினாயிரம் உள. கருவிப் பெயர்கள், தொழில் செய்முறைப் பெயர்கள், வேளாண்மைத் தொடர்பான ஆயிரக்கணக்கான துறை வேறுபட்ட சொற்கள், பயிர்வகை, செடிவகை, மரவகைப் பெயர்கள் எனக் கூறிக்கொண்டே போகலாம். இவற்றுக்குப் பல நூற்றுவர் முயல வேண்டும்.

மேலே கூறிய, உரையாசிரியர்கள் காட்டிய வட்டார வழக்குச் சொற்கள் பலவும், நம் பழந்தமிழ் நூல்களிற் காணப்படுவனவே.

கொச்சைவழக்குகளை, ஒலித்திரிபுக் குறுமொழிகளை, பிழை வழக்குகளை அறவே விட்டுவிடவேண்டும். முழுமையான சொற்கள் பல நூறாயிரம் உள.

வடசொல்

பிறமொழிச் சொல்

வாழும் மொழியில் பிறமொழிச் சொற்கள் கலக்க நேர்வது இயல்பேயாகும். பல நாட்டினருடன், பிற மொழியினருடன் கலந்து பழகுகின்றோம். பல நாட்டுப் பொருள்களை வாங்குதலும் நம்மவற்றை அவர்களிடம் விற்றலும் நடைமுறை வாணிகமாகும். இதனால் உலக வழக்கில் பிறமொழிச் சொற்கள் பேசநேரும். அவை காலப்போக்கில் இலக்கியத்திலும் ஏறும்.

செத்த மொழி, வழக்கற்றுப்போன மொழியில் பிறசொற் கலக்க வாய்ப்பில்லை. மூவாயிரம் ஆண்டுக்கு முன்பிருந்தே மிகச் செறிவும் செழுமையும் செம்மையுமுடையதாய் விளங்கிவரும் தமிழில், பிறசொற் கலப்பு தீங்கு விளைவித்தல் இயலாது.

எனினும் பாரதநாடு முழுவதும் பரவி வழங்கிய தமிழில், வெளியேயிருந்து புகுந்த ஆரியர்களால், அவர்களின் சொற்கள் இங்கு

புகவும், இங்கிருந்தவற்றை அம்மொழி ஏற்கவும் வேண்டியதாயிற்று. இதனால் தொல்காப்பியர், அவ்வாறு கலந்தவற்றை முன்பே, தமிழர்கள் வரன்முறைப் படுத்தி ஏற்றனராதலின், அதற்கும் இலக்கணம் வகுத்தார்.

ஆங்கிலத்தில் கிரேக்க, இலத்தின் சொற்கள் மிகக் கூடுதலாகக் கலந்துள்ளன. தமிழ்ச் சொற்களும் சில கலந்துள்ளன. ஆனால் அவற்றை ஆங்கில ஒலிவடிவப் படுத்தி ஏற்றுக்கொண்டனர். அதனால் அச்சொற்களும் அம்மொழிக்குரிய சொற்களாக மாறிவிட்டன. தமிழிலும் சமஸ்கிருதம் வேறு; வடமொழி வேறு. சமஸ்கிருதம் என்பது அம்மொழி அதன் வடிவப்படியே இருப்பது. ஸ்பஷ்டமாக, க்ருபா, ப்ரகாஷ் என்பன சமஸ்கிருத வடிவங்கள். கிருபை, பிரகாசம் என்பன தமிழ்வடிவப் படுத்தியவை.

பிறமொழிச் சொற்கலப்பில், அப் பிறமொழி ஒலிக் கலப்பே ஒரு மொழியைச் சிதைத்துவிடும். ஒலிக்கலப்பு கூடவே கூடாது. இதனை நன்கு கருத்திற்கொண்டு தொல்காப்பியர் இலக்கணம் வகுத்துள்ளார்.

வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே (884)

ஆங்கிலேயன் கறி, எனும் சொல்லை அவ்வாறே ஏற்றுக் கொண்டான், அது அவனது மொழியின் ஒலி வடிவம் கெடாமையின், ஆனால் அரிசியை, 'ரைஸ்' எனவும் கட்டுமரத்தை 'கட்டமரான்' என்றும் மதுரையை 'மெசூரா' என்றும் திருநெல்வேலியை 'டின்னவேலி' என்றும் இவ்வாறு நூற்றுக்கணக்கில் மாற்றினானே? ஏன்? அவனுடைய 26 ஒலி எழுத்துக்களுக்குள் அனைத்துப் பிற மொழிச் சொற்களையும் அடக்குவதே நெறிமுறையாகும். தமிழ்த் தடியன் 'காஃபி' என்றால் உயர்ந்த வகை' ஆகின்றான், காப்பி கொண்டுவா என்றால் தவறாமல் 'குரைப்பவன்'போல் பார்க்கின்றான். 'ரைஸ்' போடு என்று நாம் கடன்கொடுத்த சொல்லைக் கட்டியழும் இந்தக் கழுதையை மீண்டும் குதிரையாக்க முடியாதே. நரியைப் பரியாக்கினான் ஆங்கிலேயன்; பரியை நரியாக்கி மகிழ்கின்றான், தாழ்வுமனப்பான்மைத் தமிழன்.

வடவெழுத்து 'ஒரீஇ' என்றான் பழந்தமிழ்ச் சான்றோன். பிற

ஒலியை அறவே நீக்கு என்று கட்டளையிட்டான். எழுத்தொடு புணர்ந்த சொல் – தமிழ் எழுத்தொலியுடன் கூடிய சொல். அது தமிழின் இயல்பைக் கெடுக்காது.

இந்நூற்பாவை, இன்றைக்கு ஏற்ப, 'பிறசொற் கிளவி' என மாற்றி நாம் உணரவேண்டும். அக் காலத்தில் சமஸ்கிருதம் ஒன்றே. தமிழிற் புகமுயன்ற ஒரே பிறமொழியாக இருந்தது. இன்று போர்ச்சுக்கீசியம், உருது, பிரெஞ்சு, ஆங்கிலம் என இது வளர்ந்துவிட்டது.

தொல்காப்பியர், தமிழுக்கு ஏற்ப மாற்றும் போது அப்பிறமொழிச் சொல் சிதையுமேனும், கவலைப்படாமல் தமிழாக ஆக்கு என்றார்.

சிதைந்தன வரினும் இயைந்தன வரையார் (685)

confirm–கண்புறமானது, Bottle-போத்தல் ஆனது, Button-பொத்தான் ஆனது, Anglosaxon என்பதே மூலமொழி என்பதை உணர்ந்த தமிழன் English என்னாது ஆங்கிலம் என்றே அழைத்தான்.

கமலம், திலகம், அலுமினியம், பதில்–என்பன பொது எழுத்தாலானவை. மோகம், வச்சிரம்(வஜ்ர), அரி(ஹரி), பங்கயம் (பங்கஜம்) என்பன வடவெழுத்து ஒரீஇ(நீக்கி) தமிழாக ஆனவை. ப்ரயாண்–பயணம். ரிஷி–இருடி, ராட்சசன்-அரக்கன். இவ்வாறு மாற்றங்கள் செய்துள்ளனர்.

தமிழ்ச் சொற்கள்

பெயரும் வினையும்தான் தமிழ்ச் சொற்கள். இவற்றினிடையே வந்து, பொருள் மாற்றம் செய்வன இடைச் சொற்கள்.

முருகன் கொடுத்தான் – பெயரும் வினையும் வந்தன. முருகனுக்குக் கொடுத்தான் – 'கு' என இடையே வந்த உருபு இடைச் சொல். மரம் + வெட்டினான் = மரத்தை வெட்டினான். மரம்+அத்து+ஐ+வெட்டினான். அத்து – சாரியை. இது சொல்லை ஒட்டுவதற்கு – சொல் உருவாக்கத்திற்கு – ஐ – என்ற உருபைச் சேர்ப்பதற்கு இடையே வருவது 'சாரியை'. உருபு, சாரியை எல்லாம் இடைச் சொற்கள்.

உரிச்சொல் – அருஞ்சொல்; செய்யுளில் பெரிதும் வரும்; அடிச் சொல்லாகப் பயன்படும். 'நனி', என்பதும் 'கடி' என்பதும் உரிச்சொற்கள். நனிபேதை மிகவும் முட்டாள். நனிதின்றான் – மிகுதியாகச் சாப்பிட்டான். கடிமணம் – திருமணம். கடிவேல்–கூரியவேல். கடிநகர் காவலுள்ள நகர். அடிச்சொல்லாகவும் அருஞ்சொல்லாகவும் வரும் உரிச்சொற்களைத் தொகுத்த தொல்காப்பியர் நிகண்டு அகராதி எனும் , தொகுப்புக் கலைகளுக்கு அடிக்கல் நாட்டினார் எனலாம்.

வண்ணச் சினைச் சொல்

தமிழில் அடைமொழிகள் பற்றிய தனி ஆய்வுகள் தேவை. ஹோமர் தம் காப்பியம், நாடகம், தனிப்பாடல்களில் ஆளும் அடைமொழிகள் அழகுக்கு அழகு தருவன என்பர்.

சங்கப் பாடல்களில் வரும் அடைமொழிகள் அவைகட்கு நிகரானவை. விரைபரி (குதிரை) பாய்புலி, தேய்பிறை – வினைத்தொகை அடையாகின்றன. கடுஞ்சினம், பசும்பால், வெண்தாமரை–பண்புச்சொற்கள் அடையாகின்றன. சிறந்தநூல், உயர்ந்த மனிதர் எனல் பெயரெச்சத் தொடர்கள் அடைமொழித் தன்மையின. 'உறு' பொருள்' (மிக்க பொருள்), தவப்பெரிது, (மிகப்பெரிது,) மல்லல் மூதூர்–வளமான பழைய ஊர் (மல்லல்–வளம்)–இவ்வாறு உரிச்சொற்கள் அடைமொழிகளாக வரும்.

அடைமொழித் தொடர்களில் புதுமையானது வண்ணச் சினைச் சொல். சங்கப் பாடல்களில் இது நூற்றுக் கணக்கில் வருகிறது. வண்ணம் + சினை + சொல் என்பதிலேயே அதன் இலக்கணம் உளது.

அடைசினை முதல்என முறைமூன்றும் மயங்காமை
நடைபெற் றியலும் வண்ணச் சினைச் சொல் (509)

அடைமொழி பண்பை உணர்த்தும். சினை–உறுப்பு. முதல்–தலைமைச் சொல். செங்கால் நாரை : செம்மை – பண்பு, கால்–சினை அல்லது உறுப்பு. நாரை – உறுப்பையுடைய முதல் – தலைமைச் சொல். பெருந்தலைச் சாத்தன், சிறுகண் யானை, முழங்கு திரைக்கடல்) கருநெடுங்கண்.

செந்தார்ப் பைங்கிளி, சிறு கருங்காக்கை இவை சிறிது மாறி வந்தன. இவை போல்வனவற்றைத் தொகுத்துப் பார்ப்பின் இவற்றால் கிடைக்கும் இலக்கிய இன்பத்தை நுகர்ந்து சிறக்கலாம்.

இன்று வெண்தாடி வேந்தர் என்றால் யாரைக்குறிக்கும். என்பது நாம் அறிந்ததே.

அடுக்குத் தொடர்கள்

வேற்றுமை அல்லாத அல்வழித் தொடர்களில் அடுக்குத் தொடர் என்பது ஒன்று. இதனைத் தொல்காப்பியர், நன்னூல் தந்த பவணந்தி முனிவர் இது பற்றிக் குறித்துள்ளவை கொண்டு, நாம் மேன்மேலும் ஆராய்ந்தால் தமிழின் சிறப்பு இளையோர்க்குத் தெற்றெனை விளங்கும்.

இசைநிறை அசைநிலை பொருளொடு புணர்தலென்று
அவைமூன் றென்ப ஒருசொல் லடுக்கே. (894)

ஆஆ என்ன வியப்பு – இது போன்றதை இசைநிறை என்பர்; இது பெரிதும் செய்யுளுக்குரியது. என்ன என்ன, சரிசரி என வெறுமனே இடையிடையே வருவன அசைநிலை. பொருள் தருமாறு அடுக்குதல் மட்டும் பலவகைப்படும்.

வந்தது வந்தது கூற்று (நாலடியார் 4) – விரைவு பற்றி அடுக்கியது. கண்டேன் கண்டேன் (என் கண்ணாலே கண்டேன்) துணிவு. (ஆமா, நான்தான்) அடித்தேன் அடித்தேன் – உடம்பாடு, வருக வருக!, வாழ்க வாழ்க!– விழைவு (விருப்பம்). பார்பார் – பலகால் நிகழ்தல். இவ்வாறு எத்தனையோ விதமாக அடுக்கலாம்.

வலுவும் பொலிவும், கண்ணும் கருத்தும், ஆட்டமும் பாட்டமும், குறையும் குற்றமும், எண்ணும் எழுத்தும் – இணைத் தொடர்களாக வருவன பலவுள

மேடும் பள்ளமும், காடும் கழனியும், குறையும் நிறையும், நன்றும் தீதும் – இவ்வாறு எதிர் இணைத் தொடர்களாக வருவனவும் கணக்கில.

களை எடுத்தல், குறுக்குச்சால் ஓட்டுதல், தறிகெட்டுத்திரிதல்,

கொம்பு சீவுதல் – வேளாண்தொழில் வழி மரபுத் தொடர்கள்.

கைகழுவி விட்டேன், கை நழுவிப் போனது, கைமேற்பலன், தொழில் கையைக் கடித்துவிட்டது. கை தொடர்பாக நூற்றுக் கணக்கில் மரபுத் தொடர்கள் உள.

இவைபோல்வன அடுக்குத் தொடரில் அடக்கப்பட்டு அகராதிகள் தொகுக்கலாம். இன்று சிலர் தொகுத்துள்ளனர். இன்னமும் இதற்கு நிரம்ப இடமுளது.

இரட்டைக்கிளவி

தொல்காப்பியர் 'இரட்டைக்கிளவி' என ஒன்றையும் குறிப்பிடுவது அவர் உலக வழக்கை உற்றுநோக்கியதன் பயனாகும். பொலபொலவென உதிர்ந்தது. கலகலவெனச் சிரித்தனர். மொழுமொழு வெனக் குழந்தை வளர்கிறது. வழவழவெனப் பேசினான்.

இரட்டைக் கிளவி இரட்டிற்பிரிந் திசையா (531)

இவை தனியே பிரிக்க முடியாது; பிரித்தால் பொருள் தராது. மடமட, கடுகடு, சுறுசுறு என்பனவும் கடுகடுப்பு, சுறுசுறுப்பு என அவையே ஒரு சொல்லாய் வழங்குவனவும் இத்தகையன பலவும் இதிலடங்கும்.

அடுக்குத் தொடர், இரட்டைக் கிளவி இவற்றைப்பற்றி மேலும் ஆராய்ந்து. அகராதிகள் தொகுக்கவேண்டும்.

ஈ, தா, கொடு

தொல்காப்பியர் பல இடங்களில் குறிப்பிட்ட சொற்களை ஆளும் விதம் பற்றிக் கூறியுள்ளார். இவை முன் மாதிரிகளே எனப் பலமுறை கூறியுள்ளோம். இதுபோல் சொற்களின் நேர் பொருள்களையும் நிழற்பொருள்களையும் நாம் தேடவேண்டும்.

ஈதா கொடுஎனக் கிளக்கும் மூன்றும்
இரவின் கிளவி ஆகிடன் உடைய (927)

இம் மூன்று சொற்களும் ஒருவன் பிறரிடம் இரந்து கேட்கும்போது கூறுவன. சிலர் அன்றைய சமுதாய நிலையை இது காட்டுகின்றது என நகையாடுவர்.

அவர்களே கண்கண்ட உலகில் ஒருவருக்கொருவர் உதவி கேட்கும் நிலைகளில், இவ்வாறான கெஞ்சிக்கேட்டல், அன்பாய்க் கேட்டல், அதட்டிக் கேட்டல் போன்றவற்றை அறிந்தவர்தாம். ஏதோ உலகில் 'சமதருமம்' வந்துவிட்டதாம். தொல்லாசான் தவறு செய்து விட்டாராம். அவர் உலகில் வழங்கும் சொற்களுக்கு இலக்கணம் கூறுகிறார். நம்மைவிட உலகச் சமத்துவம். சமதருமம், பொதுவுடைமை, மானுட முன்னேற்றம் இவற்றில் அவர் காட்டும் அக்கறையை நூல் முழுவதும் கற்பார் நன்குணாவார்.

அவற்றுள்

ஈஎன் கிளவி இழிந்தோன் கூற்றே (928)

பாரி முல்லைக்குத் தேரை ஈந்தான். 'வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை' குறள் .221) அவ்வாறு இரக்காமல் வாழுமாறு முயல்க என்பதைத் தொனிப் பொருளாகக் கொள்ளவேண்டும். இதுமானவுணர்ச்சியைத் தூண்டவில்லையா?

தாஎன் கிளவி ஒப்போன் கூற்றே (929)

இது சமநிலையிற் கூறுவது. தண்ணீர் தா, துண்டை எடுத்துத் தா, எங்களுக்கு விருந்து தருக, கண்ணன் புத்தாடை தந்தான். இவ்வாறு கேட்டும் கொடுத்தும் கொண்டும் வாழ்வதே சமுதாயச் சமநிலை மேம்பாடு; அவ்வாறொழுகுக என்பதே தொனிப்பொருள். இஃது அறநூல் அல்லவே உலகில் உள்ளதற்கு இலக்கணம் சொல்வதே அதன் கடமை.

கொடுஎன் கிளவி உயர்ந்தோன் மேற்றே (930)

வரிகொடு என்றான் அதிகாரி. நண்பன் கடன் கொடுத்தான். (கொடுத்தவன் உயர்ந்த நிலையினன் என்பது கூறாமலே உணரப்படும்).

இவை ஒரு பொருளனவே. இங்கு சொல்லப்பட்டன நிழற்பொருள்களே. ஏழை செல்வனிடம் எனக்குக் கொடு என்றால் அதிகாரத் தொனி ஏற்படும்; எனக்குத் தா என்று கேட்பான். ஈ எனப் பெரிதும் யாரும் கேட்பதில்லை அது இழிவென்பதால்.

ஈஎன இரத்தல் இழிந் தன்று அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று!
கொள்எனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்

கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று (புற.204)

கழைதின் யானையார் – வல்வில் ஓரியைப் பாடிய இப்பாடலை ஒப்பிடுக; வேண்டாம் என விளம்புமளவு உயர்க.

மொழிவகை

தொல்காப்பியர் குறிப்பிடும் தமிழ்ச்சொல் இலக்கணம்தான் அம்மொழியின் இளமையைக் காத்தது. அளவிறந்த கருத்துகளுக்கு வழிவகுக்கும் அவற்றில், ஒருசில சிறந்த பகுதிகளையே நாம் இங்கு அறிமுகம் செய்து கொள்கின்றோம்.

தமிழ்மொழியிலுள்ள மொழிகளின் உள்வகைகளை ஓரிடத்தில் கூறுகின்றார்.

ஓரெழுத் தொருமொழி ஈரெழுத்தொருமொழி
இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி உளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே (45)

தமிழில் ஓரெழுத் தொரு மொழிகள் மிகப்பல. நெட்டெழுத்து என்பன உயிர்நெடிலாயினும் உயிர்மெய் நெடிலாயினும் வேறு பொருள் தரும்போது சொல்லாகிவிடும். எழுத்துக்கள் தொடர்ந்து பொருள் தருவது சொல் என்பது மாறி, எழுத்தே தன்னை உணர்த்துவதன்றி பிறிதொரு பொருள் தந்து சொல்லாவது தமிழின் சிறப்புக்களில் ஒன்றெனலாம்.

ஆங்கிலத்தில் A–என்பது ஓரெழுத்தொரு மொழியாகப் பயன்படுகிறது. A book – ஒரு புத்தகம். A class – உயர்வகுப்பு முதல் வகுப்பு, I–நான். தமிழில் ஆ–பசு, வியப்புக்குறிப்பு. ஊ–தசை, ஊன், உணவு. ஈ–தருவாயாக. தா, போ, கா, நா, வா, சா, பா, யா, மா, தீ, போ. கூ என அடுக்கலாம். சில பலபொருளுடையன. இவை சைகை மொழியிலிருந்து பிறந்ததற்கு அடையாளம் என்பர் ஆய்வாளர்.

கூ–குயில், கா.காக்கை, மா–மாடு இவை போல்வன 'போறல் வகை' என்பர். இவை தமிழின் தொன்மையைக் காட்டுவன எனபர்.

ஈரெழுத்துச் சொற்களே அடிச்சொற்கள்; வேர்ச் சொற்களாய் அளவிறந்து இசைக்கின்றன. அடி, பிடி, கொடு, நட, பிசி, மடி, கடி,

எடு இலை, தலை, பாடு, கேளு என அடுக்கலாம். இவை வினைஅடிச் சொல்லாக, ஏவல்சொல்லாக, பெயர் அடிச் சொல்லாக ஆயிரக்கணக்கில் வருகின்றன.

தொல்காப்பியர் ஈரெழுத்தொரு மொழிக்கு மேற்பட்டன எல்லாம் தொடர் மொழிகள் என்றாலும் தமிழில் மூன்றெழுத்து ஒரு மொழிகளும் கணக்கற்றவை. அவற்றுள் குற்றியலுகரச் சொற்களும் அடங்கும்.

தமிழ், கடல், படகு, வடம், கலம், தாளம், தோல்வி, வெற்றி, கட்டு, முருகு, கனவு, நனவு, வளைவு என எண்ணலாம். ஓரெழுத்தொரு மொழி, ஈரெழுத்தொருமொழி, மூவெழுத்தொருமொழி எனத் தொகுத்துப் பார்க்கலாம். குற்றியலுகரச் சொற்களைத் தனியே தொகுக்கலாம்.

புணர்மொழிகள்

கற்சிலை, பொன்னகரம், கற்குவியல், தன்னம்பிக்கை, கடலலை, ஆலிலை, வேலையாள், மாவிலை, கடைக்கண், பொற்சிலை, நடுகல், பதினொன்று, இருபது—இவ்வாறு இரண்டு சொற்புணர்ந்து ஒரு சொல் நீர்மைத்தாய் விளங்குவன – வழங்குவனவே புணச்சி விதி பற்றிஆராய வைக்கின்றன. தமிழில் இக் கூட்டுச் சொற்கள் தனியே, வகைமைப்படுத்தித் தொகுக்கப்பட்டால், தமிழை எளிதாகக் கற்பிக்கலாம்.

தமிழ்ச்சொற் கட்டமைப்பு

ஒவ்வொரு மொழியிலும் தனிநிலை, ஒட்டுநிலை, உட்பிணைப்பு நிலை மூன்றும் உள. ஆயினும் இவற்றில் ஏதேனும் ஒன்று மேலோங்கி நிற்கும்.

தமிழ் ஒட்டுநிலையில் பெரிதும் உளது. ஒரு சொல்லின் உறுப்புக்களைத் தனித்தனியே பிரிக்கலாம்; பிறகு பிரித்துவாறே சேர்த்து முன்னைய வடிவை உருவாக்கி விடலாம்.

கூனன்	– கூன் + அன்
பாடினான்	– பாடு + இன் + ஆன்
எடுத்தான்	– எடு + த் + த் + ஆன்
படித்தனன்	– படி + த் + த் + அன் + அன்
கண்டனன்	– காண் கண் என மாறியது

– காண் (கண்) + ட் + அன் + அன்

வந்தனன் – வா(வ) + த்(ந்) + த் + அன் + அன்

இவை ஒவ்வொன்றற்கும் தனிப் பொருளும் பெயரும் உண்டு. பகுதி அல்லது முதனிலை, விகுதி அல்லது இறுதிநிலை. இவற்றுடன் இடைநிலை. பகுதிக்கும் இடைநிலைக்கும் இடைப்பட்டது சந்தி. காண்– கண் என மாறுவது பகுதி திரிந்த விகாரம். வா–வ எனத் திரிவதும் அது, த–ந் ஆவது சந்தி திரிந்த விகாரம். வந்தானில் ஆன் இறுதிநிலை, வந்தனன் என்பதில் அன்+அன் – என இரண்டு உள. முன்னது சாரியை, பின்னது விகுதி, இறுதிநிலை.

இத்தகைய சொற்கட்டமைப்பை மாற்றி வர்றான், பாட்றான், கேக்குறான், விளையாட்றான், என்றால் உட்பிணைப்பாகிப் பிரிக்கமுடியாத நிலையை அடைகின்றன. அதனால் தமிழ் சிதைந்துவிடும்.

பலமொழிகளில் உட்பிணைப்பு நிலையே மிகக் கூடுதல். தமிழில் கொச்சை வழக்கில் இது புகுந்துவிட்டது. தவறு என்பது விளங்கினால், திருத்தமாக, முழுச்சொல்லாகப் பேசுவர், எழுதுவர்.

தமிழ்ச் சொற் கட்டமைப்பே அதன் இளமைக்கும், என்றென்றும் நிலை பெறுதற்கும் அடிப்படையாகும். இக்கட்டமைப்பு பாடல் வடிவிலும் இலக்கிய வடிவிலும் ஏறியுள்ளதால், தமிழ் 'பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்' விளங்குகின்றது.

*****

தொல்காப்பியம் அறிமுகப் பயிற்சிக் களம்

மாண்புமிகு **'கலைஞர்'** அவர்களின் அரிய முயற்சியால், இந்திய நடுவணரசு நம் அமிழ்தினுமினிய தமிழ்மொழியைச்

செவ்வியற் செம்மொழி (Classical Language)

என அறிவித்துள்ளது. வரலாறு தெரிந்த காலந்தொட்டே 'செம்மொழி'யாக விளங்கிவரும் தமிழின் பழந்தமிழிலக்கியச் சிறப்புக்களை அனைவரும் அறிமுகப்படுத்திக் கொள்ளவும், ஆர்வம் காட்டிக் கற்கவும் வேண்டுமென எண்ணியே இப் பயிற்சிக் கள நூல்கள் வெளியிடப்படுகின்றன.

பயிற்சி நெறிமுறை

1. ஆர்வமுடையவர்கள் முன்னதாகவே இந் நூல்களைப் பெற்றுப் பலமுறை படித்திருக்க வேண்டும்.
2. பயிற்சி நாளன்று, பயிற்றுநர் எந்த நூல் எடுத்துக் கொள்ளப்படுகிறதோ அதைப் பற்றி ஒருமணி நேரம் விளக்கிக் கூறுவார்.
3. தொடர்ந்து ஒருமணி நேரம் பயிற்றுநரும் பயிற்சியாளரும் வினாவிடையாகக் கலந்துரையாடுவர்.

இப் பயிற்சியை வாய்ப்பு வசதி இருப்பின் இரண்டு நாட்களும் பகுத்துக் கொண்டு நடத்தலாம்.

கல்லூரி, பல்கலைக் கழகம், தமிழமைப்புக்கள், ஆர்வலர்கள், வள்ளல்கள் எல்லோரும் இதனை நடத்துமாறு வேண்டுகின்றோம். ஆங்காங்குள்ள தமிழறிஞர்களும் இதனைப் பயின்று, தாமே அங்கங்கு நடத்தலாம்.

ஒவ்வொரு நூலும் உருவா பத்துக்குக் கிடைக்கும்

விற்பனை உரிமை

மீனாட்சி புத்தக நிலையம்

48 தானப்ப முதலி தெரு, மதுரை-625 001.

பேசி:0452-2345971